நிலங்கள் ஏதும் இல்லையெனில், தனியார் எவரேனும் நிலம் கொடுக்க முன்வரும்பட்சத்தில், நில எடுப்புச் சட்டம், 31/1978-ன்கீழ் நிலத்தைக் கையகப்படுத்தி, வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 304, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

304—

தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா

***36879—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியிலுள்ள சிப்காட்டில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்மூலம், உலகமே வியந்து பாராட்டும் வகையில், ரூ.2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடியில் (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் தொடங்க வழிவகை செய்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, எனது பதிலைச் சமர்ப்பிக்கிறேன்.*

முற்பகல் 10-25

(அ) மற்றும் (ஆ) தருமபுரியிலுள்ள சிப்காட்டில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 செப்டம்பர் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தொழில் ரீதியாக மிகவும் பின்தங்கிய மாவட்டம் தருமபுரி மாவட்டமாகும். அரசின் தொழிற்சாலைகளோ அல்லது தனியார் பன்னாட்டு கம்பெனி நிறுவனங்களோ ஏதும் இல்லாத மாவட்டம் தருமபுரி மாவட்டம். மொத்தமுள்ள சுமார் 16 இலட்சம் மக்களிலே, படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்த 2 இலட்சத்து 64 ஆயிரம் இளைஞர்களுக்கு, இதுவரை வேலைவாய்ப்பு கிடைக்காமல் இருக்கக்கூடிய மாவட்டம். கடந்த சில ஆண்டு காலமாக கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டபோது, 2004-2005 ஆம் ஆண்டில், ஏறக்குறைய மூன்றரை இலட்சம் பேர் அண்டை மாநிலங்களுக்கு வயிற்றுப் பிழைப்புக்காகக் குடிபெயர்ந்த மாவட்டம். சுமார் 24,000 ரேஷன் கார்டுகளைப் பறி கொடுத்த மாவட்டம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பல்வேறுபட்ட 2 இலட்சத்து 42 ஆயிரம் கோடி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. டில்லி பாபு, சிப்காட்டில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைப்பது குறித்துதான் கேள்வி. நீங்கள் எங்கெங்கோ போனால், எப்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பதிலிருக்கும்? நீங்கள் அதைமட்டும் கேளுங்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே, ஐதராபாத், அதற்கு அடுத்ததாக எனது தருமபுரி மாவட்டத்திற்கு பக்கத்தில் இருக்கக்கூடிய பெங்களூரு சிட்டிதான் I.T. துறையில் பெரியளவில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருக்கிறது. அங்கெல்லாம் இருக்கக்கூடிய I.T. Park-ஐப் போன்று பக்கத்தில் இருக்கக்கூடிய ஓசூர், அதற்கு அடுத்ததாக இருக்கக்கூடிய தருமபுரி மாவட்டத்திலே தொழில்நுட்பவியல் பூங்காவைக் கொண்டுவருகிறபட்சத்தில், நிச்சயமாக பெரிய அளவில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தி, அந்தப் பின்தங்கிய மாவட்டத்தை மேலும் முன்னேற்றத்திற்குக் கொண்டுசெல்ல முடியும். அந்த அடிப்படையில் புதிதாக அமைய உள்ள சிப்காட்டிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு தொழில்நுட்பவியல் பூங்கா அமைப்பதற்கு மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சிப்காட்டிலே தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா ஆரம்பிக்கப்படுமா என்று கேள்வி எழுப்பினார். சிப்காட் என்பது தொழில் துறைக்குச் சொந்தமான இடமாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இளைஞர்கள் வேலைவாய்ப்புகளைப் பெறவேண்டும் என்ற அடிப்படையில், தருமபுரி, சிப்காட்டிலே தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கக் கோரியுள்ளார். அவர் சார்ந்த தருமபுரி மாவட்டத்திற்கு அருகிலே உள்ள ஓசூரிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மதிநுட்பத்தினால், 174.4 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு ELCOSEZ மின்னணு நிறுவனங்களுக்காக ஏற்கெனவே உருவாகியுள்ளது. அதில், 20 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 154.47 ஏக்கர் நிலம் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யத் தயாராக உள்ளது. மேலும், தருமபுரி அருகிலுள்ள சேலத்தில் 164.26 ஏக்கர் நிலப்பரப்பில் ELCOSEZ ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த ELCOSEZ-ல் பல்வேறு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்காக 25 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதம் 139.26 ஏக்கர் நிலம் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யத் தயாராக உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையின்கீழ் செயல்படும் தமிழக அரசின் தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தகவல் தொழில்நுட்பவியலில் சிறந்து விளங்கி, தமிழகம் முழுவதும், சென்னை உட்பட 8 இடங்களில் ELCOSEZ என்ற சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேற்கண்ட 8 ELCOSEZS-ல் 40 ஆயிரம் நபர்கள் நேரடியாகவும், 80 ஆயிரம் நபர்கள் மறைமுகமாகவும் பணிபுரிந்து வருகின்றனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் மதிநுட்பத்தினாலும், தொலைநோக்குப் பார்வையினாலும், நடந்து முடிந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்மூலம் தகவல் தொழில்நுட்பத் துறையில்மட்டும் ரூபாய் 10,950 கோடிக்கு முதலீடு செய்ய (மேசையைத் தட்டும் ஒலி) வழிவகை செய்தது மட்டுமல்லாமல்,

2015 செப்டம்பர் 21]

இதன்மூலம் இரண்டு இலட்சத்து ஐந்தாயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கி, தகவல் தொழில்நுட்பத் துறை மேலோங்கி வளர்ந்திட வழிவகை செய்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இம்மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தருமபுரி தொகுதியில் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய தொழில் துறை மற்றும் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் எல்லாம் புதிதாக சிப்காட் அமைப்பதற்கு ஆய்வு செய்து 1,700 ஏக்கருக்கும் மேலாக நிலம் தேர்வு செய்திருக்கிறார்கள். மாண்புமிகு தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்கூட, அந்த ELCOSEZ இந்தப் பக்கம் ஓசூரிலே அமைக்கப்பட்டிருக்கிறது; அந்தப் பக்கம் சேலத்திலே அமைக்கப்பட்டிருக்கிறது என்றார். ஆனால், எனது தருமபுரி மாவட்டத்தை விட்டுவிட்டார். சமீபத்தில்கூட தருமபுரியிலே இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில், பக்கத்திலே உள்ள TVS கம்பெனி, இன்னும் பல கம்பெனிகளைச் சார்ந்தவர்கள் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலே ஒரு பெரிய வேலைவாய்ப்பு முகாமை நடத்தி, ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு அத்தகைய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அரசு இத்தகைய தொழில்நுட்பவியல் பூங்காவை அங்கு தொடங்குமெனில், பல்லாயிரக்கணக்கான படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். வருகின்ற காலத்தில் தருமபுரியிலே எப்போது புதிய தொழில்நுட்பவியல் பூங்கா பூக்கும்? அது பூத்து, எப்பொழுது அந்த மாவட்டத்து மக்களுக்கு மணம் வீசும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சிப்காட்டில் இடம் இருக்கிறது; அதிலே தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கின்றார். தொழில் துறை அதற்கான இடம் வழங்கும்பட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அது பரிசிலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 305, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

305—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கக் கட்டடம்

***61988—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, கூகலூர் பேரூராட்சி, தண்ணீர்பந்தல்புதூரிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி, நிகழ்கால வளமைக்காகவும், எதிர்கால சந்ததியினர்களுக்காகவும் சிந்திக்கும் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி வினாவிற்கான விடையை அளிக்க விழைகிறேன்.

அந்தியூர் தொகுதி, கூகலூர் பேரூராட்சி, தண்ணீர்பந்தல்புதூரில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக்